Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிறு, ஏப்ரல் 20, 2025 | இதழ் 7

# ஏப்ரல் 21 அன்று குடிமைப் பணிகள் தின நிகழ்ச்சியில் பிரதமர் உரையாற்றுகிறார்

சென்னை, 20 ஏப்ரல் 2025: 17-வது குடிமைப் பணிகள் தினத்தை முன்னிட்டு, பிரதமர் திரு நரேந்திர மோடி 2025 ஏப்ரல் 21 அன்று காலை 11 மணியளவில் புதுதில்லி விஞ்ஞான் பவனில் குடிமைப் பணி அதிகாரிகளிடையே உரையாற்றுகிறார். பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்கியவர்களுக்கான பிரதமரின் விருதுகளையும் அவர் வழங்குவார்.

இந்தியா முழுவதிலும் உள்ள குடிமைப் பணி அதிகாரிகள் கமக்களுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் எனவும் பொதுச் சேவையில் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் எனவும் தங்கள் பணியில் மேலும் சிறப்பாகச் செயலாற்ற வேண்டும் என்றும் பிரதமர் எப்போதும் அவர்களை ஊக்குவித்து வந்துள்ளார். இந்த ஆண்டு, மாவட்டங்களின் முழுமையான வளர்ச்சி, முன்னேற்றத்தை அடைய விரும்பும் வட்டங்கள் திட்டம் போன்ற பிரிவுகளில் 16 விருதுகளை பிரதமர் வழங்குகிறார். இதன் மூலம் சாதாரண மக்களின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் சிறந்த பணிகளுக்காக குடிமைப் பணி அதிகாரிகள் அங்கீகரிக்கப் படுவார்கள்.

# முப்படைகளின் எதிர்கால போர்ப்பயிற்சியின் இரண்டாவது பதிப்பை புதுதில்லியில் உள்ள ஒருங்கிணைந்த பாதுகாப்பு படையினர் தலைமையகம் நடத்தவுள்ளது

சென்னை, 20 ஏப்ரல் 2025: முப்படைகளின் எதிர்கால போர்ப் பயிற்சியின் இரண்டாவது பதிப்பு, புது தில்லியில் உள்ள மானெக்ஷா மையத்தில் 2025, ஏப்ரல் 21 முதல் மே 09 வரை நடைபெறும். தலைமையக ஒருங்கிணைந்த பாதுகாப்புப் பணியாளர்களின் கீழ் நடத்தப்படும் இந்தப் பாடமுறை முப்படையினர், சிந்தனையாளர்கள், போர்ப் பயிற்சி மையம் மூலம் ஒருங்கிணைக் கப்படுகிறது.

செப்டம்பர் 2024-ல் நடத்தப்பட்ட முதல் பாடத்திட்டத்தின் வெற்றியை மேலும் நன்கு கட்டியெழுப்ப, இந்த விரிவாக்கப்பட்ட மூன்று வார பாடத்திட்டம் நடைபெறுகிறது. நவீன யுத்தத்தின் சிக்கலான சவால்களுக்கு அதிகாரிகளைத் தயார்படுத்துவதற்கான பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதி அனில் சௌஹானின் பார்வையை இது தொடர்கிறது .

இந்தப் பதிப்பில் சிறப்புப் பாடங்கள் மற்றும் ராணுவ நடவடிக்கைகளில் களம் சார்ந்த போர் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய பாடத்திட்டம் உள்ளது. சிந்தனை, கருத்துக்கள், கோட்பாடுகள், உத்திகள், நுட்பங்கள், நடைமுறைகள் ஆகியவற்றை மறுபரிசீலனை செய்வது அவசியமாகும். இது உள்நாட்டு பாதுகாப்புத் துறையின் திறன் களுடன் செயல் பாட்டு முன்னுரி மைகளை சீரமைக்கும். நவீன மற்றும் எதிர்கால போர் முறையின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய சுதந்திரமான விவா தத்தை முன்னெடுக்கும்.

பயிற்சியில் பங்கேற் பவர்களாக மேஜர் ஜெனரல்கள் முதல் மேஜர்கள் வரையும் பிற சேவைகளைச் சேர்ந்த அவர்களுக்கு இணையான அதிகாரிகளும், டிஆர்டிஓ உட்பட பாது காப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள பிற துறை களின் பிரதிநிதிகளும், ஸ்டார்ட்-அப்கள், எம்எஸ்எம்இக்கள் மற்றும் தனியார் தொழில்துறையை உள்ளடக்கிய பாதுகாப்புத் துறை யினரும் இருப்பார்கள்.

இந்த இரண்டாம் பதிப்பு, ஆயுதப் படைகளை 'எதிர் காலத்திற்கு தயார்' செய்யும் பெரிய பணியைத் தொடர் கிறது. இது முப்படைகளுக்கு இடையே கூட்டு மற்றும் ஒருங் கிணைப்பை வளர்ப் பதுடன், நவீன போரின் சிக்கலான களத்தை வழிநடத்தும் திறன் கொண்ட ராணுவத் தலைவர்களை உருவாக்குகிறது.

# வேவ்ஸ் உச்சி மாநாட்டையொட்டி மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், ஊடக நிறுவனங்களுடன் ஆலோசனை நடத்தினார்

சென்னை, 20 ஏப்ரல் 2025: படைப்பாளிகளின் உலகமும் அவர்களின் பொருளாதாரமும் ஒரு அடிப்படை மாற்றத்தை சந்தித்து வருகிறது. 2025 மே 1 முதல் 4 வரை மும்பையில் நடைபெறவுள்ள முதல் உலக ஒலி ஒளி பொழுதுபோக்கு உச்சிமாநாடான வேவ்ஸ்-சை ஒட்டி செய்தி ஊடகங்களுடன் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கலந்துரை யாடினார். இந்த கலந்துரையாடலில் தேசிய, பிராந்திய செய்தி ஊடகங்களைச் சேர்ந்த சுமார் 20 ஊடக நிறுவனங்கள் கலந்து கொண்டன.




இதில் பேசிய மத்திய அமைச்சர், ஊடக உலகின் வடிவம் மாறி வருகிறது என்று கூறினார். புதிய நடைமுறைகளுக்கு ஏற்ப செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஒரு உள்ளடக்கத்தை உருவாக்க ஒரு பெரிய ஸ்டுடியோ தேவைப் பட்ட நிலை இப்போது இல்லை என்று கூறினார். இன்று தொலைதூர கிராமத்திலிருந்தும் கூட ஒரு படைப்பாளி நல்ல தரத்துடன் படைப்புகளை உருவாக்க முடியும் எனவும் பல லட்சக் கணக்கான பார்வைகளை அந்த படைப்பு பெற முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

படைப்பாளிகளின் பொருளாதாரம் அதிவேகமாக வளர்ந்து வருவதாக அவர் குறிப்பிட்டார். ஊடக, பொழுதுபோக்குக்கான உலகளாவிய தளமாக வேவ்ஸ்-சை உருவாக்க அரசு விரும்புகிறது என்று அவர் மேலும் கூறினார்.

இந்தியாவின் படைப்பாற்றல் பொருளாதாரம் மிகப் பெரிய ஊக்கத்தைப் பெற்றுள்ளது என அவர் தெரிவித்தார்.

வேவ்ஸ் 2025 தொடர்பான போட்டிகளுக்கு, 1 லட்சத்துக்கும் மேற்பட்ட பதிவுகள் வந்துள்ளதாகவும் வளர்ந்து வரும் உலகளாவிய ஊடக, பொழுதுபோக்கு சூழலில் சிறந்த பங்களிப்புகளை வழங்குபவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படும் எனவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

உலகத்தை படைப்பாளர்களுடன் இணைக்கும் வழியாக வேவ்ஸ் செயல்படும் என்றும், படைப்பாளிகள், ஊடக - பொழுதுபோக்கு தொழில் துறையினர், பொழுதுபோக்கு சந்தைகள் ஆகியவற்றுக்கு இடையேயான உலகளாவிய இணைப்பாக வேவ்ஸ் உருவாகி வருகிறது என்று அமைச்சர் கூறினார். வேவ்ஸ் மூலம், பொழுதுபோக்கு தொழில் துறையினர் ஒரு தளத்தைப் பெறுகிறார்கள் எனவும் இதில் படைப்பாளிகள் தங்கள் உள்ளடக்கத்தை வழங்கலாம் எனவும் நிறுவனங்கள் தரமான படைப்புகளை வணிகமயமாக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற பல்வேறு ஊடக நிறுவனங்களின் முன்னணி பிரதிநிதிகள், கொள்கை வகுப்பாளர்கள், படைப்பாளிகள், தொழில் துறையினர், தொழில் நுட்பத் துறையினர் வேவ்ஸ் வடிவில் ஒரு புதுமையான கருத்தாக்கத்தை உருவாக்கியதற்காக மத்திய அரசுக்குப் பாராட்டு தெரிவித்தனர்.

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் செயலாளர் திரு சஞ்சய் ஜாஜூ பங்கேற்பாளர்களையும் பிரமுகர்களையும் வரவேற்று,

இந்தக் கூட்டு உரையாடலின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

# கலைஞர் கைவினைத் திட்டத்தின் மூலம் 8950 பேருக்கு மான்யம்: ஸ்டாலின் வழங்கினார்

சென்னை 20, ஏப்ரல் 2025 : முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், சேக்கிழார் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலைஞர் கைவினைத் திட்டத்தை தொடங்கி வைத்து, 8,951 பயனாளிகளுக்கு 34 கோடி ரூபாய் மானியத்துடன் 170 கோடி ரூபாய் கடன் ஒப்புதல் ஆணைகளை வழங்கினார்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் 7.29 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவப் பட்டுள்ள பேராவூரணி கயிறு குழுமம், ராமநாதபுரம் மாவட்டம், வசந்த நகரில் 6.72 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள நகை உற்பத்தி குழுமம், தென்காசி மாவட்டம், ஆலங்குளம் நகரில் 1.15 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவப் பட்டுள்ள மகளிர் எம்ராய்டரிங் குழுமம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இத்திட்டத்தின் கீழ், மரவேலைப்பாடுகள், படகு தயாரித்தல், உலோக வேலைப் பாடுகள், பூட்டு தயாரித்தல், சிற்ப வேலைப்பாடுகள், கண்ணாடி வேலைப் பாடுகள், மண்பாண் டங்கள், சுடுமண் வேலைகள், கட்டட வேலைகள், கூடை முடைதல், கயிறு, பாய் பின்னுதல் உள்ளிட்ட 25 வகையான தொழில் இனங்களுக்கு புதிய தொழில் அலகுகளை தொடங்குவதற்கும்; ஏற்கனவே உள்ள அலகுகளை நவீன வடிவில் விரிவாக்கம் செய்திடவும் திறன் மேம்பாட்டு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மற்றும் தமிழ்நாடு கட்டுமான தொழி லாளர் நலவாரியம் மூலம் வழங்கப்பட்டு, 25 சதவீத மானியம், அதிகபட்சமாக ரூ.50,000 - வரையிலும், வங்கிகடன் 3 லட்சம் ரூபாய் மற்றும் 5 சதவீத வட்டி மானியத்துடன் அனைத்தும் உள்ளடக்கியதாக செயல் படுத்தப் படுகிறது. இத் திட்டத்தின் கீழ் பயன் பெற குறைந்தபட்ச வயது 35 ஆக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

மேலும், கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ் அதிக எண்ணிக் கையிலான பயனாளி களுக்கு கடன் வழங்கிய தாய்கோ வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் கனரா வங்கி ஆகிய வங்கியாளர்களுக்கு முதலமைச்சர் பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கினார். தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், ரெட்டவயல் கிராமத்தில் 5.84 கோடி ரூபாய் மாநில அரசு மானியத்துடன் கோடி ரூபாய் திட்ட மதிப் பீட்டில் பேராவூரணி கயிறு குழுமத்தை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

ராமநாதபுரம் மாவட்டம், வசந்த நகர் பகுதியில் 6.08 கோடி ரூபாய் மாநில அரசு மானியத்துடன் 6.72 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவப் பட்டுள்ள நகை உற்பத்தி குழுமத்தை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், வசந்த நகர் பகுதியில் இயங்கும் 20 நகை உற்பத்தி அலகுகள் இணைந்து செயல்படும் வகையில், குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 6.08 கோடி ரூபாய் மாநில அரசு மானியத்துடன் 6.71 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் இந்த நகை உற்பத்தி குழுமம் ளுருவாக்கப் பட்டுள்ளது.

தென்காசி மாவட்டம், ஆலங் குளம் நகரில் 1 கோடி ரூபாய் மாநில அரசு மானியத்துடன் 1.15 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மகளிர் எம்ராய்டரிங் குழுமத் யை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் நகரில் இயங்கும் 50 ஆடை உற்பத்தி செய்யும் குறு நிறுவனங்கள் சுமார் 200 தொழிலாளர்களுடன் செயல்பட்டு வருகின்றன. இதில் 25 மகளிர் தொழில் முனைவோர் பயன் பெறும் வகையில், குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1 கோடி ரூபாய் மாநில அரசு மானியத்துடன் 1.15 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் இந்த எம்ராய்டரிங் குழுமம் அமைக்கப்பட்டுள்ளது.

2023 - 24ம் ஆண்டில் மாநில அளவில் சிறப்பாக செயல்பட்ட சிறந்த குறுந்தொழில் நிறுவனத்திற்கான விருதினை திருச்சிராப்பள்ளி டிஜிட் பிசினஸ் சர்வீசஸ் நிறுவனத்திற்கும், சிறந்த மகளிர் நடுத்தரத் தொழில் நிறுவனத்திற்கான விருதினை காஞ்சிபுரம் கிரியா மெடிக்கல் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும், சிறந்த மகளிர் சிறு தொழில் நிறுவனத்திற்கான விருதினை திண்டுக்கல் பி.ஆர்.எஸ். டெய்ரி நிறுவனத்திற்கும் முதலமைச்சர் விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

இந்த விழாவில், தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, செல்வம், சட்டமன்ற ளுறுப் பினர்கள் செல்வப் பெருந்தகை, எஸ்.எஸ். பாலாஜி, வரலட்சுமி மதுசூதனன், எம். பாபு, இ. கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருணூானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# எலான் மஸ்குடன் பிரதமர் மோடி தொலைபேசியில் பேச்சு தொழில்நுட்ப துறையில் இணைந்து செயல்பட ஆலோசனை

சென்னை 20, ஏப்ரல் 2025 : அமெரிக்க தொழிலதிபரும், உலகப் பணக்காரர்களில் ஒருவருமான எலான் மஸ்குடன் தொலைபேசியில், பிரதமர் மோடி நேற்று பேசினார்.

தொழில்நுட்பம், புத்தாக்கம் ஆகிய துறைகளில் இணைந்து செயல்படுவது பற்றி அவர்கள் ஆலோசனை நடத்தினர்.

உலகின் பெரும் கோடீசுவரர்களில் ஒருவரான எலான் மஸ்க், டெஸ்லா, ஸ்பேஸ்எக்ஸ், எக்ஸ் வலைத்தளம் உள்ளிட்ட நிறுவனங்களை நடத்தி வருகிறார். அவர் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் நிர்வாகத்தில் நல்ல செல்வாக்குடன் திகழ்ந்து வருகிறார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு பிரதமர் மோடி அமெரிக்கா சென்றிருந்தபோது, எலான் மஸ்கை சந்தித்து பேசினார்.

இந்நிலையில், பிரதமர் மோடி நேற்று எலான் மஸ்குடன் தொலைபேசியில் பேசினார். அப்போது, பல்வேறு துறைகளில் இணைந்து செயல் படுவது குறித்து ஆலோசனை நடத்தினர்.

எலான் மஸ்கின் டெஸ்லா மின்சார கார் நிறுவனம், நம் நாட்டில் கால் பதிக்க உள்ளதாகக் கூறப்படும் நிலையில், இந்த உரையாடல் நடந்துள்ளது.



இதுபற்றி பிரதமர் மோடி தனது 'எக்ஸ்' வலைத்தள பக்கத்தில் ஒரு பதிவு வெளி யிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப் பதாவது:-

எலான் மஸ்குடன் பேசினேன். பல்வேறு பிரச்சினைகள் பற்றி விவாதித்தோம். இந்த ஆண்டு தொடக்கத்தில் வாஷிங்டனில் சந்தித்த போது பேசிய தலைப்புகளும் அவற்றில் அடங்கும்.

தொழில்நுட்பம், புத்தாக்கம் ஆகிய துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் பற்றி ஆலோசனை நடத்தினோம். இந்த துறைகளில் அமெரிக்காவுடன் நமது கூட்டு செயல்பாட்டை மேம்படுத்த இந்தியா எப்போதும் உறுதி பூண்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ☼ஆளுநர் தமிழ்நாட்டிற்கு எதற்கு?☼ - இந்திய சுயராஜ்ய கட்சி தலைவர் ராம்குமார் கேள்வி!

சென்னை 20, ஏப்ரல் 2025: இந்திய சுயராஜ்ய கட்சியின் பத்திரிகையாளர் சந்திப்பு இன்று சென்னை வட பழனியில் தலைவர் ராம்குமார் தலைமையில் நடைபெற்றது. அதில்



நிறுவனர் & தலைவர் ராம்குமார் கூறுகையில்:

இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கு ஆளுநர் பதவி என்பது தேவையற்றது. காலம் காலமாக ஒன்றியத்தில் எந்த ஆட்சி வருகின்றதோ யாருடைய ஆட்சிக்கு வருகின்ற போது அவர்களின் கைப்பாவையாக அவர்கள் ஆளாத மாநிலங்களில் ஆளுநர்களை கொண்டு ஆட்சியைப் பிடிக்க பார்க்கின்றனர் அல்லது எல்லா விதத்திலும் இடைஞ்சல்களை தருகின்றனர். மாநிலத்திற்கு கவர்னர்கள் என்பதே தேவையற்றதாகின்றது. மாநில அரசின் ஆட்சியை கண்காணிக்க ஜனாதிபதி உள்ளார். மாநிலத்திற்கு ஒத்திசைவாகவும் உதவியாகவும் இருக்க வேண்டிய ஆளுநர், மாறாக பெரும் தலைவலியாக இருந்துள்ளார் என்பதே வரலாறு. மத்தியில் ஆளாத அரசு மாநிலத்திற்கு எதிராக ஆளுநர் மூலம் எதிர்க்கட்சித் தலைவரை விட மிக மிக மோசமான துரோகியாக செயல்பட வைக்கிறது. மிக முக்கியமாக ஆளுநர்களுக்கு என்று மாநிலத்தில் எந்த அதிகாரமும் இல்லாத போது எதற்காக கவர்னர் பதவி என்பது கேள்விக்குறியாக உள்ளது. எனவே ஆளுநர் பதவியை ஒட்டுமொத்தமாக மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும்.

நடிகர் விஜய், அரசியலில் திடீர் எம்ஜிஆர் ஆக முயற்சிக்கிறார். தங்க ஸ்பூனால் சாப்பிட்டு எப்போதும் ஏசியில் இருந்து வளர்ந்தவரால் எப்படி ஏழை மக்களின் துயர் துடைக்க பொது வாழ்வில் ஈடுபட முடியும். இதுவரையில் பொதுவெளியில் வந்து அவர் எந்த ஒரு போராட்டமும் பேரணியோ ஊர்வலமோ மறியலோ நடத்தியதே இல்லை.

நேரடியாக ஒரு பத்திரிகையாளர் சந்திப்பு இதுவரையில் நடந்தது இல்லை. முதலாளித்துவ அடிப்படையில் விஜய் செயல்படுகின்றார்.

# 20 - ஆண்டுகளுக்குப் பிறகு வெளியாகி ரசிகர்கள் கொண்டாட்டத்தில் 'சச்சின்'!

சென்னை 20, ஏப்ரல் 2025: சமீப ஆண்டுகளில், கிளாசிக் தமிழ் படங்களை மீண்டும் வெளியிடும் போக்கு வேகம் பெற்றுள்ளது, இதனால் ரசிகர்கள் பெரிய திரையில் தங்களுக்குப் பிடித்த தருணங்களை மீண்டும் அனுபவிக்க முடிகிறது. விஜய்யின் 'கில்லி' மறு வெளியீடுகளுக்கு ஒரு புதிய அளவுகோலை அமைத்துள்ள நிலையில், பழைய பிளாக்பஸ்டர் படங்கள் திரையரங்குகளுக்கு திரும்புவதைச் சுற்றியுள்ள உற்சாகம் மேலும் வலுவடைந்துள்ளது. தளபதி விஜய்யின் 2005 ஆம் ஆண்டு காதல் , நகைச்சுவை கொண்ட திரைப்படமான 'சச்சின்' ஏப்ரல் 18 ஆம் தேதி வெளியிடப்பட்டது . இந்த படம் திரையரங்குகளுக்குதிரும்புவதற்காக ஆவலுடன் காத்திருக்கும் ரசிகர்களுக்கு உற்சாகத்தை அளித்தது. "சச்சின் ஏப்ரல் 18 ஆம் தேதி உலகளவில் பிரமாண்டமாக



வெளியான சச்சின் படத்தின் போஸ்டரைப் பகிர்ந்து கொண்டு தயாரிப்பாளர், இந்த மறு வெளியீடு ஏப்ரல் 14, 2005 அன்று படம் அதன் அசல் அறிமுகத்திலிருந்து 20 ஆண்டுகளை நிறைவு செய்வதால் ஒரு சிறப்பு சந்தர்ப்பத்தைக் குறிக்கிறது. இந்த ஏக்கம் நிறைந்த நடவடிக்கை, அவரது வளர்ந்து வரும் ரசிகர் பட்டாளத்திற்கு ஏற்றவாறு கிளாசிக் விஜய் படங்களை மீண்டும் வெளியிடும் போக்கைப் பின்பற்றுகிறது

ஏப்ரல் 2024-ல், விஜய்யின் 'கில்லி' படம் மீண்டும் வெளியிடப்பட்டு, அபார வெற்றி பெற்றது, பாக்ஸ் ஆபிஸில் வசூலித்து, மறு வெளியீட்டில் கூட பிளாக்பஸ்டராக அமைந்தது. விஜய்யின் கடந்த கால வெற்றிகளை பெரிய திரையில் அனுபவிக்க இன்னும் ஏராளமான ரசிகர்கள் ஆர்வமாக உள்ளனர் என்பதை இந்த அமோக வரவேற்பு நிரூபித்தது. இந்த வெற்றியால் உற்சாகமடைந்த 'சச்சின்' படத்தின் தயாரிப்பாளர் இப்போது அந்த மாயாஜாலத்தை மீண்டும் உருவாக்கி உள்ளார். இந்த படம் அதன் மென்மையான கதை சொல்லும் தன்மை, நகைச்சுவை காட்சிகள் மற்றும் இசைக்காக ரசிகர்களின் விருப்பமாக உள்ளது. மறு வெளியீட்டின் மூலம், விஜய் மற்றும் ஜெனிலியாவின் திரை வேதியியல், வடிவேலுவின் நகைச்சுவை மற்றும் தேவி ஸ்ரீ பிரசாத்தின் சார்ட் பஸ்டர் குளிர்ச்சியான ஒலிப்பதிவு ஆகியவற்றின் வசீகரத்தை மீண்டும் அனுபவிக்க பார்வையாளர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது திரைப்பட இயக்குனர் ஜே. லிமகேந்திரன் அவர்களின் மகன் ஜான் மகேந்திரன் இயக்கியுள்ள 'சச்சின்' படத்தில் ஜெனிலியா டிசோசா, ரகுவரன் , பிபாஷா பாசு, வடிவேலு, சந்தானம் , மயில்சாமி, தாடி பாலாஜி ,மற்றும் சாம்ஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

ஏப்ரல் 18 ஆம் தேதி மீண்டும் வெளியிடப்பட்ட சச்சின் வெள்ளித் திரையில் தனது பழைய மாயாஜாலத்தை மீண்டும் உருவாக்கி உள்ளது. உலகமெங்கும் வெளியாகி வசூல் மழை பொழிகிறது 'சச்சின்'.

# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப்பெருந்தகை, எம்எல்ஏ அவர்கள் விடுக்கும் அறிக்கை - 19.04.2025

சென்னை 20, ஏப்ரல் 2025: கடந்த 11 ஆண்டுகளாக ஒன்றிய பா.ஜ.க. அரசு வரிக்கு மேல் வரி பலமுனைகளில் விதித்து மக்களை வாட்டி வதைத்து வருகிறது. ஈக்களை நேரடியாக பாதிக்கும் ஜி.எஸ்.டி. வரி விதிப்பு நாள்தோறும் மக்களை கடுமையாக பாதித்து வருகிறது. எந்த பொருளை வாங்கினாலும் ஜி.எஸ்.டி. வரியிலிருந்து தப்ப முடியாது. இந்நிலையில் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறையும் போது பெட்ரோல், டீசல் விலையும் குறைவது ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் நடைமுறையாக இருந்தது. கச்சா எண்ணெய் 110 டாலராக இருந்த போது மக்கள் மீது சுமையை ஏற்றக் கூடாது என்பதற்காக ஒன்றிய காங்கிரஸ் கூட்டணி அரசு ஆண்டுக்கு 2 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் மானியங்களை வழங்கி சுமையை ஏற்றுக் கொண்டது.

ஆனால், ஒன்றிய பா.ஜ.க. அரசு சமீபத்தில் ஏப்ரல் 8 ஆம் தேதி பெட்ரோல், டீசல் மீது லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் 2 கலால் வரி விதித்திருக்கிறது. இந்த கலால் வரி உயர்வினால் பெட்ரோல் விலை ஒரு லிட்டர் ரூபாய் 11 முதல் 13 வரையிலும், ஒரு லிட்டர் டீசல் ரூபாய் 8 முதல் 10 வரையும் விலை உயர்வு ஏற்படும் என்று கூறப்பட்டது. தற்போது ஒரு லிட்டர் பெட்ரோலில் கலால் வரி ரூபாய் 19.90 ஆக இருந்து ரூபாய் 21.90 ஆக உயர்ந்திருக்கிறது. அதேபோல் ஒரு லிட்டர் டீசல் கலால் வரி ரூபாய் 15.80 இல் இருந்து ரூபாய் 17.80 ஆக உயர்ந்திருக்கிறது. அதேபோல, சமையல் எரிவாயு விலையும் சிலிண்டருக்கு ரூபாய் 50 உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த விலை உயர்வை நுகர்வோர் மீது திணிக்க மாட்டோம் என்று ஒன்றிய அரசு கூறுகிறது. கலால் வரி உயர்வினால் ஒன்றிய அரசின் வருமானம் பலமடங்கு கூடியிருக்கிறது.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பதவி விலகும் போது பெட்ரோல் மீதான கலால் வரி ரூபாய் 9.20 ஆக இருந்தது. டீசல் மீதான கலால் வரி ரூபாய் 3.46 ஆக இருந்தது. ஆனால், இன்றைக்கு கலால் வரி உயர்வு பெட்ரோலுக்கு 357 சதவிகிதமும், டீசலுக்கு 54 சதவிகிதமும் அதிகரித்துள்ளது. நரேந்திர மோடி அரசின் வரி பயங்கரவாதத்திற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. பெட்ரோல், டீசல் வரி உயர்வினால் மக்கள் பயன்பாட்டில் ளுள்ள அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கு காரணமாக அமைந்திருக்கிறது.

2014 மே மாதம் கச்சா எண்ணெய் ஒரு பேரல் ரூபாய் 9,265. இன்று ரூபாய் 5596 மட்டுமே. அதாவது, 2014 ஆம் ஆண்டை கணக்கிடும் போது கச்சா எண்ணெய் விலை 40 சதவிகிதம் குறைந்துள்ளது. ஆனால், 2014 இல் டெல்லியில் பெட்ரோல் ஒரு லிட்டர் ரூபாய் 71.41 ஆகவும், டீசல் லிட்டருக்கு ரூபாய் 55.49 ஆகவும் இருந்தது. இன்று அதே பெட்ரோல் விலை ரூபாய் 94.77, ஒரு லிட்டர் டீசல் ரூபாய் 87.67 ஆகவும் உயர்ந்திருக்கிறது. கச்சா எண்ணெய் விலை சர்வதேச சந்தையில் 40 சதவிகிதம் குறைந்திருக்கும் போது பெட்ரோல், டீசல் விலையை குறைத்து சாமானிய மக்கள் பயனடைகிற வகையில் ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்காமல் மக்கள் மீது தொடர்ந்து சுமையை ஏற்றி வருகிறது. பெட்ரோல், டீசல் மீது கலால் வரி விதிப்பின் காரணமாக 2014 இல் இருந்து 2025 வரை பெட்ரோலியப் பொருட்கள் விற்பனை மூலம் கடந்த 11 ஆண்டுகளில் ரூபாய் 39.54 லட்சம் கோடியை வரியாக வசூலித்து ஒன்றிய அரசு தனது கஜானாவை நிரப்பியிருக்கிறது. இதைவிட அப்பட்டமான மக்கள் விரோத நடவடிக்கை வேறு எதுவும் இருக்க முடியாது.

# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப்பெருந்தகை, எம்எல்ஏ அவர்கள் விடுக்கும் ஈஸ்டர் வாழ்த்துச் செய்தி - 19.04.2025

சென்னை 20, ஏப்ரல் 2025: உலகெங்கிலும் வாழும் கிறிஸ்துவ பெருமக்கள் இயேசுபிரான் சிலுவையில் அறையப்பட்டு மீண்டும் உயிர்த்தெழுந்த நிகழ்வினை நோன்பிருந்து கொண்டாடும் பண்டிகை ஈஸ்டர் திருநாள். கிறிஸ்துவ சமுதாயத்து மக்கள் இந்நாளில் தாங்கள் சேமித்து வைத்திருந்த பணத்தை ஏழை எளியோருக்கு அன்பளிப்பாக அளிக்கின்றனர். இதனால், அனைத்து தரப்பினரும் மகிழ்ச்சியோடு ஈஸ்டர் பண்டிகையை கொண்டாட முடிகிறது.

கிறிஸ்துவ சமுதாயமே மக்கள் மீது அன்பும், பரிவும் காட்டுவதில் அளப்பரிய பங்காற்றி வருகிறது. முதியோர் இல்லங்கள், ஏழை, எளியவர்களுக்கு இலவச கல்வி, மருத்துவ உதவிகள், மாற்றுத் திறனாளிகளுக்கு புகலிடம் வழங்குவது ஆகியவை இச்சமுதாயத்தின் மிகச் சிறந்த நற்பணிகளாக விளங்கி வருகின்றன. இயேசு பிரான் போதித்த அன்பை மாறாமல் பின்பற்றுகிற கிறிஸ்துவ சகோதரர்களை மனம் திறந்து பாராட்ட விரும்புகிறேன்.

கிறிஸ்துவ சிறுபான்மை சமுதாயத்தினர் ஒன்றிய பா.ஜ.க. அரசால் பாரபட்சத்தோடு நடத்தப்பட்டு பல்வேறு கொடுமைகளுக்கும், அச்சுறுத்தலுக்கும் ஆளாகி வருகிறார்கள். அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள உரிமைகள் இவர்களுக்கு மறுக்கப்படுகிறது. மத நல்லிணக்கத்தில் நம்பிக்கையுள்ள காங்கிரஸ் கட்சி கிறிஸ்துவ சமுதாயம் உள்ளிட்ட சிறுபான்மையினருக்கு ஆதரவாக எப்போதும் செயல்பட்டு வருகிறது. இனி வருகிற காலங்களில் அவர்களுக்கு பாதுகாப்பு அரணாக காங்கிரஸ் கட்சி தொடர்ந்து செயல்படும்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பாக கிறிஸ்துவ சமுதாய மக்கள் அனைவருக்கும் ஈஸ்டர் திருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

# சென்னை தி நகர், போத்தீஸ்-இல் கத்தியுடன் நுழைந்த முன்னாள் ஊழியர் கைது.

சென்னை 20, ஏப்ரல் 2025: சென்னை, தியாகராய நகர், தெற்கு உஸ்மான் சாலையில் இயங்கிவரும் போத்தீஸ் ட்ரெடிஷனல் ஷாப்பிங் சென்டரில் 18.04.2025 அன்று காலை சுமார் 11.00 மேற்படி போத்தீஸில் பணிபுரிந்த முன்னாள் ஊழியர் திரு.எழிலரசன் ஆ/வயது 32 என்பவர் நுழைந்து அங்கு பணியில் இருந்த திரு.மன்சூர் என்ற றுழியருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டு திடீரென தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து தாக்கியதில் போத்தீஸ் நிறுவன ஊழியர் திரு.மன்சூர் என்பவரின் கை விரல்களில் கத்தி பட்டு காயம் ஏற்பட்டுள்ளது.


இதுதொடர்பாக விசாரணை செய்ததில் மேற்படி திரு.எழிலரசன் என்பவர் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் போத்தீஸில் பொருட்களுக்கு ரசீதிடும் பணிக்கு சேர்ந்ததாகவும், இவர் பணிகளை சரிவர செய்யாததால் அவரை சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்னர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

தான் பணிநீக்கம் செய்யப்பட்டதற்கு திரு.மன்சூர் (காசாளர்) என்பவர் தான் காரணம் என்பதால் அவரை கொலை புரியும் நோக்கத்தில் கத்தியை எடுத்துக்கொண்டு வந்து தாக்க முற்பட்டுள்ளது தெரிய வந்தது.

ஆர் 1 மாம்பலம் காவல் நிலைய குற்ற எண்.84/2025 யு/எஸ் 329(4),296(பி),118(1),109,351(3) பிஎன்எஸ் வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிரி கைது செய்யப்பட்டுள்ளார்.

# உயர் பொறுப்பில் இருப்பவரானாலும் சட்டத்துக்கு கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும். சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு தவறான வழிமுறையை சரிசெய்யும். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு

சென்னை 20, ஏப்ரல் 2025: சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு தவறான வழிமுறையை சரிசெய்யும் நகர்வு என்றும், உயர் பொறுப்பில் இருப்பவரானாலும் சட்டத்துக்கு கட்டுப்பட்டுதான் நடக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சமூக வலைதளப் பக்கங்களில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:-

அரசியலமைப்புச் சட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டு 75 ஆண்டுகள் கடந்து விட்டன. எதிர்க்கட்சி ஆளும் மாநில அரசுகளைச் சிதைத்து, பொதுக் கருத்தாடலில் வலது சாரிக் கருத்துகளைத் திணிக்க முற்படும் தற்போதைய தீங்கானது கவர்னர்கள், துணை ஜனாதிபதி, அவ்வளவு ஏன் ஜனாதிபதி உள்பட அரசியலமைப்புப் பதவிகளை அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதில் இருந்து முளைத்த ஒன்றாகும்.

மக்களாட்சியில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் அரசை நடத்த வேண்டும், அலங்கார நியமனப் பதவிகளில் அமர்ந்திருப்பவர்கள் அல்ல! எந்தத் தனிநபரும், அது எத்தகைய உயர் பொறுப்பில் இருப்பவரானாலும் அவர் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும்.

இதைத்தான் சுப்ரீம் கோர்ட் சுட்டிக் காட்டியிருக்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க அத்தீர்ப்பு தவறான வழிமுறையைச் சரி செய்யும் நகர்வாகும்.

ஆகவே, இந்த வரவேற்கத்தகுந்த சீர்திருத்த நடவடிக்கை பல ஜனநாயக விரோத சக்திகளை நிலைகுலைய வைத்துள்ளதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

தற்போதைய தேவை என்பது, இந்தச் சீர்திருத்தம் முழுமையாக நடை முறைத்தப்படுவதை உறுதி செய்வதே. இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## குமரன் நகர் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பின் மொட்டை மாடியில் உள்ள பித்தளை வாட்டர் மீட்டர்களை திருடிய நபர் கைது. 6 பித்தளை வாட்டர் மீட்டர்கள் மீட்பு.





சென்னை 20, ஏப்ரல் 2025: சென்னை, மேற்கு மாம்பலம், எல்லையம்மன் கோயில் தெருவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் பாலாஜி, வ/37, த/பெ.ரகுநாத், என்பவர் 18.04.2025 அன்று விடியற்காலை, வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது, அவரது வீட்டு மொட்டை மாடியிலிருந்து சத்தம் கேட்கவே, பாலாஜி மொட்டை மாடிக்கு சென்று பார்த்தபோது, ஒரு நபர் மொட்டை மாடியிலுள்ள தண்ணீர் தொட்டிகளில் பொருத்தியிருந்த பித்தளை வாட்டர் மீட்டர்களை உடைத்து திருடிக் கொண்டிருந்தது தெரியவந்தது. உடனே பாலாஜி யார் எனக்கேட்டு அருகில் சென்றபோது, அந்த நபர் தப்பியோடவே, சத்தம் கேட்டு வந்த குடியிருப்பில் வசிப்பவர்கள் உதவியுடன் அந்த நபரை மடக்கிப்பிடித்து பித்தளை வாட்டர் மீட்டர்களுடன், ஆர்-6 குமரன் நகர் காவல் நிலைய குற்றப்பிரிவில் ஒப்படைத்து புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் பிடிபட்ட நபர் வெங்கடேஷ், வ/32, த/பெ.நாகா, தனபால் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை என்பதும், வெங்கடேஷ் 2 மாதங்களுக்கு முன்பு மேற்படி அடுக்குமாடி குடியிருப்பில் பெயிண்ட் அடிக்க வந்த போது, நோட்டமிட்டு சென்றதன் பேரில், 18.04.2025 அன்று விடியற்காலை, மொட்டை மாடியிலுள்ள தண்ணீர் தொட்டிகளில் பொருத்தியிருந்த பித்தளை வாட்டர் மீட்டர்களை பெயர்த்து திருடிக் கொண்டு தப்ப முயன்றபோது பிடிபட்டதும் தெரியவந்தது.

அதன்பேரில், ஆர்-6 குமரன் நகர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, எதிரி வெங்கடேஷ் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து மேற்படி இடத்திலிருந்து திருடிய 6 பித்தளை வாட்டர் மீட்டர்கள் மீட்கப் பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி வெங்கடேஷ் விசாரணைக்குப் பின்னர் 18.04.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதின்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## மீனம்பாக்கம் அருகே மது போதையில் அதிவேகமாக காரை ஓட்டிச் சென்று 7 வாகனங்களின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய கார் ஓட்டுநர் கைது. பென்ஸ் கார் பறிமுதல்



சென்னை 20, ஏப்ரல் 2025: 18.04.2025 அன்று மாலை, ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து மீனம்பாக்கம் நோக்கி சென்று கொண்டிருந்த ஒரு பென்ஸ் கார் அதிவேகமாகவும், பொது மக்களை அச்சுறுத்தும் வகையிலும் தாறுமாறாக ஓடி அவ்வழியே சென்று கொண்டிருந்த 3 இருசக்கர வாகனங்கள், 2 ஆட்டோக்கள் ம்ற்றும் 2 கார்களின் மீது மோதி நின்றது.

இது குறித்து தகவலறிந்த எஸ்-1 புனித தோமையர் மலை போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அதிவேகமாக காரை ஓட்டிச் சென்ற நபரை பிடித்தபோது, மது போதையில் இருந்தது தெரியவந்தது.

மேலும், மேற்படி விபத்தில் இருசக்கர வாகனங்களில் பயணித்து காயமடைந்த 1 பெண் உட்பட 3 நபர்கள் மீட்கப்பட்டு 108 ஆம்புலன்ஸ் வாகனத்தில் மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் விபத்தை ஏற்படுத்திய கார் ஓட்டுநர் புஷ்பராஜ் என்பவரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மது போதையில் உள்ளாரா என அறியும் மருத்துவ பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு, மது போதையில் இருந்தது உறுதி செய்யப்பட்டு, சான்றிதழ்கள் பெறப்பட்டது.

இவ்விபத்தில் காயமடைந்த இருசக்கர வாகன ஓட்டி முத்துசாமி என்பவர் கொடுத்த புகாரின் மீது எஸ்-1 புனித தோமையர் மலை போக்குவரத்து புலனாய்வு பிரிவில் வழக்குப் பதிவு செய்து, மது போதையில் அதிவேகமாக காரை ஓட்டி விபத்தை ஏற்படுத்திய கார் ஓட்டுநர் புஷ்பராஜ், வ/39, த/பெ. செல்வராஜ், கழனி வாசல் கிராமம், குன்னம் தாலுக்கா, பெரம்பலூர் மாவட்டம் என்பவரை கைது செய்தனர். விபத்தை ஏற்படுத்திய பென்ஸ் கார் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி புஷ்பராஜ் திரைப்பட நடிகர் ஒருவரிடம் சுமார் 10 வருடங்களாக கார் ஓட்டுநராக வேலை செய்து கொண்டு அங்கேயே தங்கி வருவது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி புஷ்பராஜ் விசாரணைக்குப் பின்னர் 19.04.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## அரும்பாக்கம் பகுதியில் 6 வருடங்களுக்கு முன்பு காணாமல் போன 12 வயது சிறுமி கடலூரில் உள்ள காப்பகத்தில் இருந்து மீட்கப்பட்டு, நல்ல நிலையில் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சென்னை 20, ஏப்ரல் 2025: 2018ம் ஆண்டு சென்னை, அரும்பாக்கம் பகுதியில் குடும்பத்துடன் வசித்து வந்த 12 வயது சிறுமி 8ம் வகுப்பு படித்து வந்தபோது, 01.011.2018 அன்று பள்ளிக்கு சென்றவர் திரும்ப வீடு வராமல் காணாமல் போனதால், சிறுமியின் தாயார் கே-8 அரும்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் சிறுமி காணவில்லை பிரிவில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற் கொண்டு, காணாமல் போன சிறுமியை தீவிரமாக தேடி வந்தனர்.

போலீசாரின் முதற் கட்ட விசாரணையில் காணாமல் போன சிறுமி சற்று ஞாபக மறதி என தெரியவந்தது. மேலும் கே-8 அரும்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு, தனிப்படையினர் சிறுமி படித்த பள்ளியிலும், சிறுமியின் தோழிகளிடமும் தீவிர விசாரணை செய்து சிறுமியை தேடி வந்தனர்.

இந்நிலையில் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. ஆ. அருண், இ.கா.ப., அவர்கள் காணாமல் போன நபர்களை தனிப்படைகள் அமைக்கப்பட்டு, கண்டறிய கொடுத்த உத்தரவின்பேரில், கே-8 அரும்பாக்கம் காவல் நிலைய தனிப் படையினர் ஒவ்வொரு மாவட்டம் வாரியாக காணாமல் போன சிறுமி குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டபோது, கடலூர் மாவட்டத்தில் உள்ள ஒரு காப்பகத்தில் மேற்படி சிறுமி இருப்பதாக கிடைத்த தகவலின்பேரில், 17.04.2025 அன்று கே-8 அரும்பாக்கம் காவல் நிலைய தனிப் படையினர் பெண் காவலர்களுடன் சிறுமியின் தாயாரை கடலூர் மாவட்டம் அழைத்துச் சென்று அங்குள்ள காப்பகத்தில் விசாரணை மேற்கொண்டதில், அங்கு தங்கியிருந்த 19 வயது பெண், காணாமல் போன மேற்படி சிறுமி என அவரது தாயார் மூலம் உறுதி செய்யப்பட்டது. பின்னர் உரிய சட்ட நடவடிக்கைகளுடன் 19 வயது பெண்ணை மீட்டு, சென்னை அழைத்து வந்து 18.04.2025 அன்ற காலை முறையான விசாரணைக்கு பின் மீட்கப்பட்ட பெண் அவரது தாயாரிடம் நல்ல நிலையில் ஒப்படைக்கப்பட்டார்.

மேலும், சிறுமி காணாமல் போன விவரம் குறித்து, குழந்தைகள் நல அதிகாரிகள் உதவியுடன் தனிப்படையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

காணாமல் போன மறதியால் விவரங்கள் அளிக்க இயலாத தனது ஒரே மகளை கண்டுபிடித்து தன்னிடம் ஒப்படைத்த காவல் குழுவினருக்கு சிறுமியின தாயார் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தார்.

சுமார் 6 வருடங்களுக்கு முன்பு காணாமல் போன சிறுமியை கண்டுபிடித்து, அவரது தாயாரிடம் ஒப்படைத்த கே-8 அரும்பாக்கம் காவல் நிலைய காவல் குழுவினரை சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு. ஆ. அருண், இ.கா.ப., அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்.

## முத்தியால்பேட்டை பகுதியில் ஆட்டோவில் இளைஞரை கடத்திச் சென்று பணம் கேட்டு மிரட்டிய 4 நபர்கள் கைது. ஆட்டோ பறிமுதல்.






சென்னை 20, ஏப்ரல் 2025: சென்னை, முத்தியால்பேட்டை பகுதியில் வசித்து வரும் 18 வயது இளைஞர் 12ம் வகுப்பு தேர்வு எழுதியுள்ளார். 16.04.2025 அன்று இரவு, மேற்படி இளைஞர் வீட்டினருகே, சேவியர் தெருவிலுள்ள டீக்கடையிலிருந்து வீட்டிற்கு செல்ல முயன்றபோது, ஒரு நபர் லிப்ட் கேட்டு இருசக்கர வாகனத்தில் ஏறிக் கொண்டு அவர் கூறிய இடத்தில் இறக்கிவிட்டபோது, அந்த நபர் மற்றும் அங்கிருந்த 4 நபர்கள் சேர்ந்து மேற்படி இளைஞரை மிரட்டி ஆட்டோவில் அழைத்துச் சென்று இரயில்வே டிராக் அருகே வைத்து, பணம் ரூ.5 லட்சம் மற்றும் 100 கிராம் தங்க நகைகள் கொடுக்குமாறும், இல்லையெனில் உன்னையும் உன் குடும்பத்தையும் கொலை செய்து விடுவேன் என மிரட்டியபோது, இளைஞரும் தருவதாக கூறியதன்பேரில், 5 நபர்களும் ஆட்டோவில் அந்த இளைஞரை ஏற்றிக் கொண்டு, கடத்திச் சென்ற இடத்தினருகே இறக்கிவிட்டு சென்றனர்.

இது குறித்து, மேற்படி இளைஞர், என்-3 முத்தியால் பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற் கொண்டனர்.

என்-3 முத்தியால் பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி கடத்தலில் ஈடுபட்ட 1.வசந்தகுமார், வ/31, த/பெ.விஸ்வநாதன், டி பிளாக், பச்சைக்கல் வீராசாமி தெரு, அயனாவரம். சென்னை என்பவரை 17.04.2025 அன்று கைது செய்து, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினர். அவரிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன் படுத்திய ஆட்டோ பறிமுதல் செய்யப் பட்டது.


மேலும் என்-3 முத்தியால்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய 2.ரஞ்சித், வ/31, த/பெ.ராஜா, பவழக்கார தெரு, மண்ணடி, சென்னை, 3.விஜய குமார், வ/30, த/பெ.பன்னீர் செல்வம், சி பிளாக், கிளைவ் பேட்டரி, சென்னை, 4.ஆனந்த் (எ) ஈசாக், வ/21, த/பெ.அன்பரசன், ஏ பிளாக், பிஆர்என் கார்டன், பிராட்வே ஆகிய 3 நபர்களை 18.04.2025 அன்று கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி விஜயகுமார் என்-3 முத்தியால்பேட்டை காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது கொலை முயற்சி உட்பட பல குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட 3 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் 18.04.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதின்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப் பட்டனர்.

மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரியை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

## தமிழ்நாட்டை சேர்ந்த 2,381 மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ரூ.5.83 கோடி கல்வி உதவித்தொகை: மத்திய அரசு வழங்கியது



சென்னை 20, ஏப்ரல் 2025: தமிழ்நாட்டை சேர்ந்த 2,381 மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக மத்திய அரசு ரூ.5.83 கோடி வழங்கி உள்ளது.

மாற்றுத்திறனாளி மாணவர்கள் உயர்கல்வி படிப்பை தொடருவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் மத்திய அரசு சார்பில் தேசிய கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் கீழ் 9-ம் முதல் 12-ம் வகுப்பு வரையில் படிக்கும் மாணவர்களுக்கு ரூ.9 ஆயிரம் முதல் ரூ.14 ஆயிரத்து 600 வரையிலும், இளங்கலை பட்டப் படிப்புகளுக்கு ரூ.10,100 முதல் ரூ.1 லட்சத்து 74 ஆயிரத்து 700 வரையிலும், முதுகலை பட்டப் படிப்புகளுக்கு ரூ.47 ஆயிரம் முதல் ரூ.3 லட்சத்து 40 ஆயிரம் வரையிலும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இந்த உதவித் தொகையை பெறுவதற்கு 9 முதல் 12-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் பெற்றோர் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.2லு லட்சமாகவும், இளங்கலை மற்றும் முதுகலை பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.6 லட்சமாகவும் இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழ்நாட்டில் இந்த நிதி உதவித்தொகையை பெறுவதற்கு மாற்றுத் திறனாளி மாணவ-மாணவிகள் அளித்த விண்ணப் பங்களில் 3,405 விண்ணப்பங்கள் மத்திய அரசுக்கு பரிந்துரைக் கப்பட்டது. இதில் தற்போது வரையில் 2,381 பேரின் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு அவர்களுக்கு ரூ.5 கோடியே 82 லட்சம் 99 ஆயிரம் தேசிய கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,024 பேருக்கு விரைவில் தேசிய கல்வி உதவித் தொகையை மத்திய அரசு விடுவிக்கும்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## "என்னடி செஞ்ச என்னோட நெஞ்ச" - மையல் படத்திலிருந்து மெலோடி இசையை விரும்பும் இசைநாயகர்களுக்கான இனிய இசை விருந்தாக வெளியாகியுள்ளது!



சென்னை 20, ஏப்ரல் 2025: மெல்லிசை, மனதை வருடும் குரல்கள், கவிதையாய் பேசும் வரிகள்ஞ் இவை அனைத்தும் இணையும் போது, இசை நாயகர்களின் உள்ளங்களை தீண்டும் ஒரு மந்திரம் உருவாகிறது.

கூட மேல கூட வச்சு, கண்கள் இரண்டால் போன்ற இனிமை நிரம்பிய பாடல்களின் வரிசையில் இப்போது இணையப்போகும் இன்னொரு மர்ம மாயம் ஞ் மையல் படத்தில் இருந்து வெளிவந்துள்ள "என்னடி செஞ்ச என்னோட நெஞ்ச".


இந்த சுகாத இசை அனுபவத்தை இசையமைப்பாளர் அமர்கீத் தனது நுட்பமான இசை பாணியால் உயிரூட்டுகிறார். பாடலுக்குச் சுவை கூட்டும் விதமாக, சத்யப்ரகாஷ் மற்றும் வந்தனா ஸ்ரீனிவாசன் ஆகியோரின் மென்மையான குரல்கள் பாடலின் உணர்வுகளை நம் உள்ளங்களில் நேரடியாகப் பதிய செய்கின்றன.

மிக எளிமையாக அமைக்கப்பட்ட இசை பின்னணி, பாடலின் உணர்வு பூர்வ தன்மையை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

ஏகாதசி எழுதிய வரிகள், எளிமை மற்றும் அழகிய உணர்வுகளின் இணைவு. அவரது வார்த்தைகள், நம்மை அசைவற்றுப் பார்த்து உணர்ச்சிகளை அள்ளி தருகின்றன. ஊயல் - உணர்ச்சிகளால் நெஞ்சை தொடும் ஓர் யதார்த்தக் கதை. இயக்குனர் ஏ.பி.ஜி. ஏழுமலை, கதை திரைக்கதை வசனம் ஜெயமோகன். சேது மற்றும் சம்ரித்தி தாரா முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படத்தை அனுபமா விக்ரம் சிங், ஆர். வேணுகோபால், மற்றும் ஐகான் சினி கிரியேஷன் எல் எல் பி தயாரிக்கின்றனர். "என்னடி செஞ்ச என்னோட நெஞ்ச" தற்போது யூட்யூப் மற்றும் அனைத்து முக்கிய இசை தளங்களில் வெளியாகி, ரசிகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுவருகிறது.

படத்தின் பாடல் வெளியீடு, ட்ரெய்லர் மற்றும் உலகமெங்கும் திரையரங்குகளில் வெளியீடும் குறித்து, படக்குழுவினர் விரைவில் அதிகாரப் பூர்வ அறிவிப்பை வெளியிட உள்ளனர்.

## நடிகர் வசந்த் ரவி அவர்களின் நன்றி அறிவிப்பு



சென்னை 20, ஏப்ரல் 2025: சில சிறப்பான தருணங்கள் அன்பும் சிந்தூரமும் ஒளிவிடும் நினைவுகளாக மாறுகின்றன.

நேற்று என் பிறந்த நாளாக இருந்தது மட்டுமல்ல, நீங்கள் எல்லாரும் காட்டிய அன்பும் ஆசிகளும் என்னை நெகிழ வைத்ததாலேயே, அது என்றென்றும் எனது மனதில் நிறைந்திருக்கும் ஒரு இனிய நினைவாகும்.

இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு, எனது பிரியமான சினிமா துறை நண்பர்களுக்கும், பத்திரிகை மற்றும் ஊடகத் துறையினருக்கும், என்னை ஆதரித்து அன்பு செலுத்தும் என் ரசிகர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் ஒவ்வொரு வாழ்த்தும் என் இதயத்தில் செதுக்கப்பட்டிருக்கின்றது. உங்கள் அன்பும் அக்கறையும் எனக்குள் ஒரு புதிய உற்சாகத்தையும், எல்லைகளைத் தாண்டி சிறப்பாக வெற்றி காணும் முனைப்பையும் உருவாக்குகின்றன. நீங்கள் எனக்கு தந்த அந்த புன்னகையை மறக்க முடியாது.

மீண்டும் ஒருமுறை, உங்களுக்குத் தனிப்பட்ட நன்றியினை தெரிவிக்கிறேன். விரைவில் உங்கள் அனைவரையும் நேரில் சந்தித்து, என்னுடைய எதிர்வரும் படங்கள் பற்றிய சில சுவாரஸ்யமான தகவல்களை பகிர்வதற்காக காத்திருக்கிறேன்.

## டெல்லியில் 4 மாடி கட்டிடம் இடிந்து 4 பேர் பலி



சென்னை 20, ஏப்ரல் 2025: டெல்லியின் வடகிழக்கு பகுதியில் இன்று அதிகாலை 4 மாடி கட்டிடம் இடிந்து விழுந்தது. இதில் 14 பேர் மீட்கப் பட்டுள்ளனர். 4 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. மேலும் 10 பேர் இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

டெல்லியின் முஸ்தபாபாத் பகுதியில் இந்தச் சம்பவம் அதிகாலை 3 மணி அளவில் நடந்துள்ளது. இதில் மீட்கப் பட்டவர்கள் ஜிடிபி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர். சம்பவம் குறித்த தகவல் கிடைத்ததும் அந்த இடத்துக்கு தேசிய பேரிடர் மீட்பு படையினர், தீயணைப்பு படையினர் மற்றும் காவல் துறையினர் விரைந்து சென்று, மீட்பு பணிகளை மேற் கொண்டு வருகின்றனர்.

கட்டிடம் இடிந்து விழுந்ததற்கான காரணம் குறித்த விசாரணை தொடங்கி உள்ளது.

கட்டிடம் இடிந்து விழுந்த போது பெரிய அளவில் தூசு ஏற்பட்டுள்ளது. இது அந்த கட்டிடத்துக்கு அருகில் இருந்த கட்டிடங்களில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளில் பதிவாகி உள்ளது.

"இடிந்து விழுந்த கட்டிடத்தில் இருந்து 14 பேர் இதுவரை மீட்கப்பட்டுள்ளனர். அவர்களில் 4 பேர் உயிரிழந்தனர்.

மருத்துவர்கள் அதை உறுதி செய்துள்ளனர். 8 முதல் 10 பேர் வரை இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என கருதுகிறோம். இடிந்து விழுந்த கட்டிடம் நான்கு மாடி கட்டிடம்" என டெல்லி வட கிழக்கு மாவட்ட காவல் துறை துணை ஆணையர் சந்தீப் லம்பா தெரிவித்தார்.

"எங்களுக்கு அதிகாலை 3 மணி அளவில் கட்டிடம் இடிந்து விழுந்தது குறித்த தகவல் கிடைத்தது.

உடனடியாக நாங்கள் இங்கு விரைந்து வந்தோம். இந்த நான்கு மாடி கட்டிடம் முழுவதுமாக இடிந்து விழுந்துள்ளது. இதன் இடிபாடுகளில் மக்கள் சிக்கி உள்ளனர்.

தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் தீயணைப்பு படையினர் மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்" என தீயணைப்பு துறை அதிகாரி ராஜேந்திர அத்வால் கூறியுள்ளார்.

## "உதவும் மனிதம்" சிறப்புவிழா: 300 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!



சென்னை 20, ஏப்ரல் 2025: நடிகர் பிளாக் பாண்டி தலைமையில் நடைபெற்ற விழா சமூகத்தில் மாற்றம் உருவாக்கும் நிகழ்வாக மாறியது.

சென்னை, "இயன்றதை செய்வோம்! இணைந்தே செய்வோம்!" என்ற தத்துவத்தில் செயல்பட்டு வரும் "உதவும் மனிதம்" அறக்கட்டளை, அதன் சிறப்புவிழாவை நடிகரும் சமூக செயற்பாட்டாளருமான பிளாக் பாண்டி தலைமையில் சென்னையில் வெகு விமர்சையாக நடத்தியது.

இந்த விழாவில் மொத்தம் 300 பயனாளிகள் பன்முக நலத்திட்ட உதவிகளை பெற்றனர். நிகழ்வின் முக்கிய நன்கொடையாளர் இலங்கையைச் சேர்ந்த தொழில் அதிபர் மற்றும் சமூக செயற்பாட்டாளர் திரு. தியாகி ஐயா ஆவார்.

வழங்கப்பட்ட முக்கிய நலத்திட்ட உதவிகள்:

100 மாணவர்களுக்கு புத்தகப்பை மற்றும் எழுதும் உபகரணங்கள்

80 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.2000 நிதியுதவி மற்றும் உணவுப் பொருட்கள்

30 பார்வையற்ற நபர்களுக்கு வியாபார உபகரணங்கள் (ரூ.3000 மதிப்பு)

20 பார்வைக் குறை பாடுள்ள நபர்களுக்கு பவர் கண்ணாடிகள்

6 திருநங்கைகளுக்கு ரூ.2000 மதிப்புள்ள உணவுப் பொருட்கள்

3 ஏழை மாணவர்களுக்கு தலா ரூ.3000 கல்வி உதவித் தொகை

2 தையல் எந்திரங்கள் தனித்துயர் பெண்களுக்கு

1 இஸ்திரி பெட்டி சலவை தொழிலாளிக்கு

1 மாணவிக்கு வில்வித்தை பயிற்சி உதவித் தொகை (ரூ.5000)

1 மாணவி தீபலஷ்மிக்கு கல்வி உதவி (ரூ.5000)

300 பேருக்கு அன்னதானம்

முக்கிய ஆதரவாளர்கள்:

பர்வீன் டிராவல்ஸ், ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ், அப்போலோ ஹாஸ்பிடல்ஸ், இம்பாலா பிரியாணி (திருச்சி), கோ வெல் டிரெஸ்ட், ஆப்டிக்கல் எக்ஸ் பிரசன்ஸ், கிரீன் ஸ்டார் ஏசி, மிது இன்டஸ்டிரீஸ் (கோயம் புத்தூர்), ஓஎஸ்பி சாட்,

விழாவில் கலந்து சிறப்பித்த முக்கிய பிரபலங்கள்:

திரு. அருணாச்சலம் (வெ. நீதிபதி), வருமான வரி அலுவலர் ரமேஷ், ஸ்டன்ட் இயக்குநர் பவர்பாண்டியன் திரைப்பட நட்சத்திரங்கள்: ராதாரவி, தலைவாசல் விஜய், வையாபுரி, டானி போப், சமபத்ராம், விசித்திரன், பழனியப்பன், படையப்பா ரமேஷ், வெற்றிவேல்ராஜா, சின்னத்திரை இயக்குநர்கள் மற்றும் கலைஞர்கள்

சமூக ஆர்வலர்கள்: சரண்யா ஜெயக்குமார் (குழந்தைகள் நலன்), நமீதா (திருநங்கை நலன்)

வாழ்த்திய பிரபலங்கள் (வீடியோவின் மூலம்):

பெரோஸ்கான், சிங்கம்புலி, பொன்வன்னன், கேபிஒய் பாலா, சாம்ஸ், ஜீவா, சுவாமிநாதன், சின்ராசு, ஸ்ரீ சசிகுமார், ஞான சஞ்சீவனம், கிருஷ்ணன் (கல்வித்துறை), சுரேஷ் சந்திரா, அப்துல்நாசர் மற்றும் ஊடக நண்பர்கள்

இவ்விழாவின் வெற்றிக்காக பங்களித்த அனைத்து ஆதரவாளர்களுக்கும் "உதவும் மனிதம்" அமைப்பின் சார்பாக இதயப் பூர்வமான நன்றிகள்.

## தமிழகத்தில் இரட்டை இலைக்கு மேலே தாமரை மலர்ந்தே தீரும்; நயினார் நாகேந்திரன் உறுதி

சென்னை 20, ஏப்ரல் 2025:''தமிழகத்தில் தாமரை மலர்ந்தே தீரும். இரட்டை இலைக்கு மேலே தாமரை மலர்ந்தே தீரும்'' என தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் பேசினார். சேலம் மாவட்டம் ஓமலூரில் நடந்த கட்சி கூட்டத்தில், தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன் பேசியதாவது:

தமிழகம் முழுவதும் என் மண் என் மக்கள் யாத்திரை மூலமாக கட்சியை பட்டி தொட்டி எல்லாம் எடுத்து சென்ற அண்ணாமலைக்கு வணக்கத்தை தெரிவித்து கொள்கிறேன்.

அகில இந்திய தலைமை என்ன முடிவு எடுக்கிறது என்று அறிந்து, அதை ஏற்று கட்டுப் பாட்டுடன் செயல்பட வேண்டும். யூர்தலுக் காக தொண்டர்கள் கடுமையாக உழைக்க வேண்டும் .தலைமை சொல்வதை அனை வரும் கேட்க வேண்டும்.

கூட்டணி குறித்து ஒருவருக் கொருவர் விமர்சனம் செய்தால், அது வேறு விதமாக போய்விடும். நமது கூட்டணி உறுதியான கூட்டணி, இறுதியான கூட்டணி. தமிழகத்தில் தாமரை மலர்ந்தே தீரும். இரட்டை இலைக்கு மேலே தாமரை மலர்ந்தே தீரும். இந்த கூட்டணி சாதாரண கூட்டணி அல்ல. வெற்றி கூட்டணி.

நமது கூட்டணியை முதலமைச்சர் சந்தர்ப்பவாத கூட்டணி என்று கூறியுள்ளார். நான் சொல்லுகிறேன்.

அவர்தான் சந்தர்ப்பவாத கூட்டணிக்கு தலைமையேற்றிருக்கிறார்.நமது கூட்டணி தான் நியாயமான கூட்டணி, ஊழல் இல்லாத கூட்டணி. தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி வருவதற்கு அனைவரும் பாடுபட வேண்டும். பூத் கமிட்டியில் இருப்பவர்கள் வேலை செய்கிறார்களா என்று யூாருங்கள். பூத்தை செம்மை படுத்தினால் தான் வெற்றி அடைய முடியும். எத்தனை தொகுதி, எப்படி கூட்டணி என்பதை எல்லாம் நாம் சொல்ல முடியாது. அமித்ஷா எடப்பாடி சேர்ந்து முடிவு எடுப்பார்கள். எனக்கு அதிகாரம் தொண்டர்களை பாதுகாப்பது தான். எங்களது தொண்டர்களுக்கு காலில் அடிபட்டால், அது எனக்கு கண்ணிலே ஏற்படும் வலி போன்றது. நான் தொண்டர்களை பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறேன். கட்சியை வளர்க்க வேண்டும். தமிழக அரசுக்கு அதிகாரம் வேண்டும், தமிழக மக்கள் அதிக பயன் அடைய வேண்டும். மத்திய அரசிடன் இருந்து தமிழகத்திற்கு அதிக நிதி வர வேண்டும் என்பதில் தமிழக பா.ஜ.க. உறுதியாக இருக்கிறது. கச்சத்தீவை பிரதமர் மோடி நினைத்தால் தான் மீட்க முடியும். இவர்கள் வெற்று தீர்மானம் போட்டு ஒன்றும் பயன் இல்லை. இவ்வாறு நயினார் நாகேந்திரன் பேசினார்.

## ரூ.2000-க்கு மேல் யூபிஐ பணபரிமாற்றம் செய்தால் ஜிஎஸ்டி: இது வதந்தி

சென்னை 20, ஏப்ரல் 2025: ரூ.2000-க்கு மேல் யூபிஐ பணபரிமாற்றம் செய்தால் ஜிஎஸ்டி வரி விதிக்க பரிசீலித்து வருவதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறானது என ஒன்றிய அரசு விளக்கம் கொடுத்துள்ளது.

அனைத்து யூபிஐ செயலிகளிலும் ரூ.2 ஆயிரத்துக்கு அதிகமான பணப்பரிமாற்றத்துக்கு 5 சதவீதம் ஜிஎஸ்டி வரி விதிக்கும் திட்டம் ஒன்றிய நிதி அமைச்சகம் வசம் உள்ளது.

அடுத்த ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்துக்கு முன்பாக இதுபற்றி ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் முடிவு செய்வார் என்று செய்திகள் பரவின.

இந்த நிலையில், ரூ.2,000 க்கு மேல் மதிப்புள்ள யூபிஐ பரிவர்த்தனைகளுக்கு ஜிஎஸ்டி விதிக்கத் திட்டமிட்டுள்ளதாகக் கூறும் அண்மை செய்திகளை நிதி அமைச்சகம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

வரி விதிக்கும் திட்டம் இல்லை

இது தொடர்பாக பத்திரிக்கை தலவல் பணியகம் (பிஐபி) வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"ரூ 2,000- க்கு மேல் யூபிஐ பரிவர்த்தனைகளுக்கு சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) விதிக்க அரசாங்கம் பரிசீலித்து வருவதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறானது, தவறாக வழிநடத்துவது. அப்படிப்பட்ட எந்த திட்டத்தையும் அரசு முன் வைக்கவில்லை.

யூபிஐ வழியாக பணபரிவர்த்தனை செய்வதை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் தொடர்ந்து உறுதி பூண்டுள்ளது. ஞலகளாவிய அறிக்கையின் படி, 2023 ஆம் ஆண்டில் உலகளாவிய நிகழ்நேர பரிவர்த்தனைகளில் இந்தியா 49% பங்கைக் கொண்டிருந்தது" என்று குறிப்பிடப் பட்டுள்ளது.